**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.37/2019**

**PW8**

| | | |
|---|---|---|
| **Name** | : | வேலு |
| **Father's Name** | : | மாணிக்கம் |
| **Village** | : | திருவண்ணாமலை |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2025.
A1, 2, 4 to 13, 15 to 17 present.

**முதல் விசாரணை**

நான் திருண்ணாமலை பச்சையப்பன் கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் தற்போது பிரண்ட்ஸ் அன்ட் கோ சர்ஜிக்கல் கம்பெனியில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. குறிப்பாக எதிரிகள் முருகன், பார்த்திபன், பட்டுசாமி ஆகியோர்களை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி முருகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்தை திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் போட்டேன். அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.8.** என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பார்த்திபன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்தை திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் போட்டேன். அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.**9.

என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பட்டுசாமி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்தை திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் போட்டேன். அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.**10. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி முருகன் என்பவரிடம் கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள உள்ள 2வது கையெழுத்தை திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் போட்டேன். அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.**11. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பார்த்திபன் என்பவரிடம் கைப்பற்றியதாக சொல்லப்படும்

கைப்பற்றுதல் மகஜரில் உள்ள உள்ள 2வது கையெழுத்தை திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் போட்டேன்.

அந்த இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.**12. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிஸ் விசாரணையில் 07.05.2013 அன்று பகல் 1.00 மணி அளவில் நானும் சரண்ராஜ் என்பவரும் ஆணாய்பிறந்தான் கூட்ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது அப்போது கிராமிய காவல் ஆய்வாளர் முருகன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் லாரியை கொளுத்திய வழக்கு சம்மநத்மாக முருகன் மற்றும் பார்த்திபன் ஆகியோரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது அவர்கள் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றும்

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நானும் சரண்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் அதை தொடர்ந்து 3.30 மணி அளவில் அந்தியந்தல் ஏரிக்கரை முள்புதரில் 1வது எதிரி முருகன் எடுத்து ஆஜர் செய்த வெள்ளை அரை கை சட்டை ஒன்றும் அதில் வலது உட்பக்கத்தில் எரிந்து கருகி இருந்தது என்றும் அந்த சட்டையில் பெட்ரோல் வாடை இருந்தது என்றும் அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் சரண்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும்

மாலை 5.00 மணிக்கு அந்தியந்தல் ஏரிக்கரை புட்புதரில் இருந்து எதிரி பார்த்திபன் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய கேன் ஒன்றும் சுமார் 650 ML கொண்ட 4 கண்ணாடி பாட்டிலும் தீயில் எரிந்து நிலையில் இருந்த சட்டை ஒன்றும் லுங்கி ஒன்றும் எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அதை ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அதில் நானும் சரண்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் 24.05.2013 மாலை 8.00 மணிக்கு நானும் சரண்ராஜ் என்வரும் திருவண்ணாமலை அபாய மண்டபம்அருகே இருந்த போது இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் ஆஜர் எதிரி பட்டுசாமியை கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சரண்ராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

அ.த.சா.ஆ 8 முதல் 10 வரை உள்ள ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றும் அதை யார் எழுதினார்கள் என்றும் எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த போது அது பூர்த்தி செய்யப்படாத வெள்ளை பேப்பராக இருந்தது. அ.த.சா.ஆ 11 மற்றும் 12 ஆவணங்களில் என்ன எழுதி

இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த போது அது பூர்த்தி செய்யப்படாத வெள்ளை பேப்பராக இருந்தது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.